## தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை - 2014

தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1996 இன் 32 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1981 இன் 54 ஆம் இலக்க தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை அதிகாரச்சட்டத்தின் 25(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரகாரம் முகவராண்மையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் முகவராண்மையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி முகவராண்மையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தரும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் படி ஏதாவது சமர்ப்பித்தல் முறைமையொன்று பயன்படுத்தப்பட்டுள்ள போதும் அறிக்கையிடப்படுகின்ற திகதி முதல் 12 மாதங்களுக்கு முன்னரும் 12 மாதங்களின் பின்னரும் அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற சொத்துக்கள், திரவத் தன்மை அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் வெவ்வேறாக வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் படி சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் இதற்குத் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி மீள் மதிப்பீட்டு பெறுமதியை விட ரூபா 2,820,421,436 தொகை குறைத்து நித்க்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது அகற்றப்பட்ட ரூபா 80,000 பெறுமதியான சொத்துக்கள் மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்தில் கழித்து நிறுத்தி வைக்கப்பட்ட பெறுவனவுகளில் சேர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) வழுக்களுடன் கூடியதாகக் கணிப்பீடு செய்தமையின் காரணமாக பெறுமானத்தேய்வு ஒதுக்கக் கணக்கில் நான்கு கணக்கு விடயங்களின் மீதி ரூபா 6,883,045 தொகை அதிகரித்தும் மூன்று கணக்கு விடயங்களின் மீதி ரூபா 1,928,826 தொகை குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டு பயன்பாட்டிற்கான நிலையில் இருந்த ரூபா 152,245,007 பெறுமதியான கட்டிடத்தின் பெறுமதி தொடர்ந்தும் நடைமுறை வேலையாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது திறைசேரியினால் மானியமாக ரூபா 9,390,000 பெறுமதியான மோட்டார் வாகனமொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும் முழுக் கொடுக்கல் வாங்கல்களும் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தன.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1996 இன் 32 ஆம் இலக்க இலக்க தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவராண்மை அதிகாரச்சட்டம் | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்கு புறம்பாக மீன் விற்பனை நிலையமொன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 152,245,007 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 9.6 ஆம் பிரிவு | வெப்ப உடைகளைக் கொள்வனவு செய்வதற்காக மூன்று உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 49,390 தொகையான முற்பணத்திலிருந்து வெப்ப உடைகள் கொள்வனவு செய்யப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கான பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 110 | நட்டம் மற்றும் இழப்பு தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 371 | உரிய செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக பெறப்பட்ட முற்பணம் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 88 சந்தர்ப்பங்களின் போது உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 6,142,200 தொகையான முற்பணத்தைத் தீர்ப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. |
| (iii) நிதிப்பிரமாணம் 757(2) | மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2015 ஆகஸ்ட் 23 வரையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | முகவராண்மைக்குரிய ரூபா 1,931,330,957 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனி மற்றும் கணனி மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று நாளதுவரையாகப் பேணப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 8,265,784 பெறுமதியான கணனிகள் தொடர்பாக அதன்படி நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| | | எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 1997 பெப்ரவரி 03 ஆந் திகதிய 06/97 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக முகவர் நிறுவனத்தினால் 10 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் போது பதில் கடமைப் படியாக ரூபா 528,326 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (எ) | 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய 28 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாகவும் உடன்படிக்கையின்றியும் 2013 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் மாதாந்தம் ரூபா 50,000 படியொன்று செலுத்தும் அடிப்படையில் மதியுரையாளரொருவர் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் ஒக்தோபர் வரை ரூபா 950,000 படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. மேலும் இந்த மதியுரையாளரால் மேற்கொள்ளப்பட்ட மதியுரைச் சேவைகள் தொடர்பான அறிக்கையும் முகவராண்மைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டின் போது முகவராண்மையின் நிதி விளைவுகள் ரூபா 117,261,228 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 120,061,820 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,800,592 அதிகரிப்பொன்றைக் காண்பித்ததுடன் ஏனைய வருமான அதிகரிப்பும் பராமரிப்பு நடவடிக்கைகளில் செய்யப்பட்ட செலவினம் குறைவடைந்தமையும் இதற்கு பிரதானமான காரணங்களாக இருந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 8 கணக்கு விடயங்களின் செலவினம் 12 சதவீதம் முதல் 87 சதவீதம் வரை அதிகரித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளினதும் முகவராண்மையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினங்களுக்கான வழங்கப்பட்ட மானியம் மற்றும் அதன் மூலம் செய்யப்பட்ட செலவினம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினங்களுக்காகக் கிடைத்த மொத்த மானியங்களின் குறைவு ரூபா 67 மில்லியனாக இருந்ததடன் அதற்காகச் செய்யப்பட்ட மொத்தச் செலவினத்தின் அதிகரிப்பு ரூபா 02 மில்லியனாக இருந்தது. மேலும் மீளாய்வாண்டின் போது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினங்களுக்காகக் கிடைத்த மொத்த மானியத்தை விஞ்சி ரூபா 04 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) வருடாந்தம் கிடைக்கின்ற மானியங்களை இலக்கிடப்பட்ட செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படாததன் காரணமாக மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளில் முகவராண்மைக்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணம் ரூபா 1,004 மில்லியனாக இருந்த போதிலும், பயன்பாடு ரூபா 277 மில்லியனாக இருந்தது. அதன்படி கிடைத்த மானியங்களின் பயன்பாடு 28 சதவீதமாக இருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட ரூபா 220,560 பெறுமதியான 08 மோட்டார் கைக்கிள்கள், ரூபா 1,990,280 பெறுமதியான 02 டபள் கெப் வாகனங்கள் மற்றும் ரூபா 1,520,400 பெறுமதியான 02 வான் வண்டிகள் என்பவற்றை கைதவிர்ப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் 2015 மே 20 ஆந் திகதி வரையிலும் கைதவிர்க்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

தனியார் துறையினால் அபிவிருத்தி செய்யப்பட்ட 06 அரசாங்க மீன்பிடித் துறைமுகங்களுக்குரிய சாத்தியவள ஆய்வு அறிக்கை தயாரிப்பதற்காக தனியார் துறையினால் ரூபா 2,500,000 தொகை முகவராண்மைக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக முகவராண்மையினால் ரூபா 4,112,898 தொகை செலவிடப்பட்டிருந்தது. முகவராண்மையினால் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 1,612,898 தொகை அறவிடப்படாமல் சாத்தியவள ஆய்வு அறிக்கை தனியார் துறைக்கு வழங்கப்பட்டிருந்தது.

**4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 15,685,682 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஆராய்ச்சி கப்பல் குறித்த தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்படாமையின் காரணமாக ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக கணக்காய்வுத் திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நுண்ணுயிர் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 7,086,700 தொகை செலவில் கொள்வனவு செய்யப்பட்ட மொபைல் 3D ஸ்கேனர் இயந்திரம் கணக்காய்வுத் திகதி வரையிலும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009 ஆம் ஆண்டின் போது கணனி மென்பொருளொன்றைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 272,160 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த மென்பொருள் 2015 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சிற்றுண்டிச்சாலையொன்றை நிர்மாணிப்பதற்காக 2011 ஆம் ஆண்டில் ரூபா 2,626,384 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் இந்த சிற்றுண்டிச்சாலை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சரியான மதிப்பீடின்றி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,493,052 தொகையான (HP 200) இரண்டு படகு எந்திரங்கள் மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குளியாப்பிட்டி வயம்ப பல்கலைக்கழகத்தின் வளவில் நடாத்தப்பட்ட தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்காக முகவராண்மையினால் 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 978,715 தொகையான பொருட்கள் மீளப் பயன்படுத்தப்படாமல் பாதுகாப்பற்ற வகையில் குவித்து வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளய்வாண்டில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் குறித்த திகதியில் செலுத்தப்படாமையினால் ரூபா 31,372 மிகைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

**4.6 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட முகவராண்மையின் வளங்கள்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவின் பிரகாரம் தமது நிறுவனத்திற்குச் சொந்தமான வளங்கள் உரிய அமைச்சினாலும் அல்லது ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு பயன்படுத்துவதற்கும் செலவிடுவதற்கும் அனுமதியில்லாத போதிலும், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வெற்றிடமான ஊழியர்களின் எண்ணிக்கை 169 ஆகக் காணப்படும் போது, முகவராண்மைக்குச் சொந்தமான மனித வளங்கள் வரிசை அமைச்சிற்கும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கும் விடுவிக்கப்பட்டு அதற்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,027,742 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்ததுடன் முகவராண்மையால் அமைச்சின் வாகனங்களுக்காக ரூபா 158,998 தொகையான எரிபொருளும் வழங்கப்பட்டிருந்தன.

**4.7 பதவியணியினர் நிர்வாகம்**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு முகவராண்மையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 499 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 343 ஆகவும் இருந்தமையால் வெற்றிடங்கள் 156 ஆக இருந்ததுடன் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்ட அமைய ஊழியர்களின் எண்ணிக்கை 11 ஆக இருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் படி நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் முகவராண்மையினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 23 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீடு செய்யப்பட்ட தொகைக்கும் உள்ளபடியான தொகைக்குமிடையே முரண்கள் 10 சதவீதம் முதல் 146 சதவீதம் வரையிலானதாக இருந்தமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.3 சுற்றாடல் மற்றும் சமூகப் பொறுப்புக்களை நிறைவேற்றுதல்**

கைதவிர்க்கப்பட வேண்டிய பொருட்கள் இனங்காணப்பட்டு அந்தப் பொருட்களை மிக விரைவில் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காது பாதுகாப்பற்று வளவில் அங்காங்கே குவிக்கப்பட்டமையின் காரணமாக அதில் மழைநீர் சேர்வதன் காரணமாக நுளம்புகள் பெருகுவதற்கு இடமளிக்கப்பட்டமையால் நீதிமன்றத்தினால் முகவராண்மைக்கு தண்டப் பணம் விதிக்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது முகவராண்மையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) முற்பணக் கொடுப்பனவு
(ஈ) கொள்வனவு நடைமுறை
(உ) பதவியணியினர் நிர்வாகம்